THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.

Register No. | | | | | | | | |

**TA4C**

**5422–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS,
DECEMBER 2022.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours — Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define collective bargaining and evaluate the essential ingredients for the success of collective agreements in India.

   கூட்டுப் பேரத்தினை வரையறை செய்து, கூட்டுப்பேர ஒப்பந்தம் இந்தியாவில் வெற்றி பெற முக்கியமான கூறுகளை ஆய்வு செய்க.

2. What is meant by 'Retrenchment'? Discuss the provisions relating to retrenchment.

   ஆட்குறைப்பு என்றால் என்ன? ஆட்குறைப்பு சம்பந்தமான பிரிவுகளை விவாதிக்கவும்.

3. How the wages are paid and what are the deductions allowed under the Payment of Wages Act, 1936?

   1936ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் ஊதியம் எவ்வாறு வழங்கப்படுகிறது மேலும் அச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கழிவுகள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define Trade Union and explain the procedure for registration of Trade Unions as mentioned under the Trade Unions Act, 1926.

   தொழிற்சங்கத்தினை வரையறை செய்து மேலும் தொழிற்சங்கங்களை பதிவு செய்ய வேண்டிய நடைமுறைகளை தொழிற்சங்கங்கள் சட்டம் 1926 குறிப்பிட்டுள்ளதை விளக்குக.

5. Define strike. Explain the restrictions imposed in the Industrial Disputes Act, for undertaking a strike by workmen.

வேலைநிறுத்தத்தை வரையறை செய்து தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை விளக்குக.

6. Explain the procedure for fixing and revising Minimum Wages under the Minimum Wages Act 1948.

குறைந்தபட்ச ஊதியச்சட்டம் 1948ன் கீழ், குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயம் செய்ய மற்றும் மாற்றி அமைக்க உள்ள நடைமுறைகளை விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக. :

(a) Award

தீர்வம்

(b) Theories of Wages

ஊதியக் கோட்பாடுகள்

(c) Domestic Enquiry

உள் விசாரணை

(d) Advisory Board

ஆலோசனைக்குழு

(e) Living Wage

வாழ்க்கை ஊதியம்

(f) Industrial Dispute

தொழிற்தகராறு

(g) Public utility services

பொதுப் பயன்பாட்டுப் பணிகள்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Registered Trade union makes an application to the Registrar of Trade union for a change of its name duly signed by less than 2/3 of its members and the same was sent to the Registrar. Decide the validity of the application.

ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கமானது தன்னுடைய பெயரினை மாற்றக்கோரி 2/3 கீழ் குறைவான உறுப்பினர்களின் கையொப்பம் பெற்று அந்த மனுவினை பதிவாளருக்கு அனுப்பி வைக்கிறது. அந்த மனுவின் செல்லத்தக்க தன்மையினை முடிவு செய்க.



9. A group of workmen demand that they should be paid a 'Fair Wage' under the Minimum Wages Act. The employer states that he is duty bound to pay only a 'Minimum Wage' which he was doing. State whether the Authority under the Act can entertain this claim of the workmen?

தொழிலாளர்களின் ஒரு பகுதியினர் தங்களுக்கு் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் 'நியாயமான ஊதியம்' வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கின்றனர். முதலாளி, தான் குறைந்தபட்ச ஊதியம் வழங்க கடமைப்பட்டவர் என்றும், அதனை செய்து வருவதாகவும் கூறுகின்றார். தொழிலாளர்களின் இந்த கோரிக்கையினை, இச்சட்டத்தின் கீழ் கோருரிமைகளை தீர்மானிக்கும் அதிகாரமுடையவர்கள் ஏற்றுக் கொள்வரா என்று எடுத்துரைக்க.

10. In a factory where 100 workmen are working, only 20 workers raise a dispute regarding Wages and Bonus. Decide whether the dispute raised by them will come within the purview of Industrial Dispute under the Industrial Disputes Act. Give reasons.

100 பேர் வேலை செய்கின்ற தொழிற்சாலையில், வெறும் 20 பேர் மட்டும் ஊதியம் மற்றும் மீதூதியம் சம்பந்தமாக கேட்டு தொழிற்தகராறினை எழுப்புகின்றனர். அது தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் தொழிற்தகராறு என்ற வரையறைக்குள் வருமா என்று முடிவு செய்து காரணங்கள் கொடுக்கவும்.